

கர்த்தர் உரைத்த வார்த்தை

# குழந்தைகளுக்காக..

**குழந்தைகளைக் குறித்துக்
கர்த்தர் உரைத்த வார்த்தைகள் :**

இந்த வருடத்தில் கர்த்தர் வரப்போகும் நாட்களில் சிறு பிள்ளைகள் நடுவில் ஏற்படப் போகும் சில தீமைகளைக் குறித்து முன்னறிவிப்பாக எச்சரித்துச் சொல்லியிருக்கும் வார்த்தைகளை அறிந்து கொண்டு குழந்தைகளின் பாதுகாப் பிற்காக ஜெபிப்பதற்காகவே இந்தக் கைப்பிரதி வெளியிடப்பட்டிருக்கிறது. கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகளை ஆழமாக வாசித்தறிந்து அதற்காக ஜெபியுங்கள்.

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் 02.01.2019 ல் கர்த்தர் சகோ. வின்செண்ட் செல்வகுமார் அவர்களுக்கு வெளிப்படுத்தீச் சொன்னது.

## கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள்

குழந்தைகளையும், சிறு பிள்ளைகளையும் குறிவைத்து அவர்களை அழித்து விடவும், அவர்கள் வாழ்க்கையைக் கெடுத்து விடவும் தக்கதாக கொடிதான தீமைகள் தேசங்களின் மேல் வருகிறது. பிள்ளைகளும், சிறு குழந்தைகளும் வியாபாரப் பொருளாக மாற்றப்படுவார்கள். அவர்களைக் குறிவைத்துச் செய்யப்படும் கொடிய வியாபாரமானது தேசங்களில் தீவிரமாகப் பரவும். அநேகம் பிள்ளைகள் கடத்தப்பட்டு, இச்சைக்கான காட்சிப் பொருளாகவும், இச்சைக்கான கருவிகளாகவும் விலை பேசப்படுவார்கள். இவர்களைக் குறிவைத்து செய்யப்படுகிற வியாபாரம் திரைமறைவில் தீவிரமாக செல்வாக்குப் பெற்றிருக்கும். இதன் முகத்திரை கிழியும்போது, இதன் பின்னணியில் நீங்கள் நம்ப முடியாத முக்கியஸ்தர்களும், பிரபலஸ்தர்களும் இருக்கக் காண்பீர்கள்.

அன்றியும், அரசியலில் செல்வாக்குப் பெற்றிருக்கும் தலைவர்களில் சிலரும், வியாபாரத்தில் பலம் பெற்றிருக்கும் சிலரும், மத வியாபாரிகளில் சிலரும் இதன் பின்னணியில் இருப்பதைக் காண்பீர்கள். பொது இடங்களிலும், பள்ளிகளிலும், வணிக வளாகங்களிலும், இவர்கள் புகுந்து பிள்ளைகளைக் கொள்ளையிடுவார்கள். அன்றியும் இவர்கள் வீடுகளில் புகுந்து பிள்ளைகளைக் கடத்துகிறதும், பிள்ளைகளுடன் பழகி அவர்களை தங்கள் வசப்படுத்துகிறதும் தேசத்தில் பெருகுவதைப் பார்ப்பீர்கள். அன்றியும், இணையத்தின் வழியாகவும், சமூக வலைத்தளங்களிலும் பிள்ளைகளுக்கு வலை விரிக்கும் பயங்கரமும் வருகிறது. மனங்களைக் கவரும் காட்சிகளினாலும், போதையான விளையாட்டுகளினாலும், விலையுயர்ந்த பரிசுப் பொருட்களினாலும் பிள்ளைகளைத் தங்கள் வசப்படுத்தி அவர்களை கொள்ளையிடுகிறதும், வியாபாரப்படுத்துகிறதுமான கொடியவர்கள் திரளாக எழும்பியிருக்கிறார்கள். அவர்களின் கிரியைகள் இனி வருகிற நாட்களில் தீவிரமாகப் பெருகுகிறதைப் பார்ப்பீர்கள்.

மருத்துவத் துறையிலும் சில போலியான கொடியவர்கள் எழும்பி, பிள்ளைகளைக் குறிவைத்து அவர்கள் மேல் தீமைகளை கட்டவிழ்த்து விடுவார்கள். பிள்ளைகளின் உணர்ச்சிகளில் தீமையைத் தூண்டியும், அவர்களுடைய உடல் உறுப்புகளுக்காக அவர்களைக் கொள்ளையிட்டு, பிள்ளைகளைத் தீமைக்கும், வியாபாரத்துக்காக கொல்லவும் செய்யும் பொய்யான மனிதர்கள் மருத்துவத் துறையிலும் பெருகுவார்கள்.

அன்றியும் பிள்ளைகளைக் கொண்டு பிள்ளைகளையும், வயோதிபர்களைக் கொண்டு குழந்தைகளையும் தீமைக்குக் கொள்ளையிடுகிற பொல்லாத கூட்டத்தார் தேசத்தில் தீவிரித்து எழும்புவார்கள். தேசத்தில் பிள்ளைகள் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் காணப்படாமற் போவார்கள். ஆன்மீகத் தலங்களிலும், ஆலயங்களிலும், தேசத்தின் இருளிலும், வெளிச்சத்திலும் எங்கிலும் இந்தத் தீமை தீவிரமாகப் பரவும். குழந்தைகள் நடுவில் இவர்களால் மரணமும், பிள்ளைகள் நடுவில் இவர்களால் பாலியல் வன்முறைகளும் தீவிரமாக அரங்கேற்றப்படும்.

குழந்தைகளைக் கொண்டு செய்யப்படுகிற இவ்விதமான திரைமறைவு வியாபாரமே, அதிக பொருளைத் தருகிறதும், குறுகிய காலத்தில் செல்வந்தர்களாக்குகிறதுமாயிருக்கும். இதின் காரணமாக அநேகர் திரைமறைவில் இப்படிப்பட்ட தீமைக்கு துணை போவார்கள். அன்றியும், சிறுவர்களையும், சிறுமியரையும் குறிவைத்து பள்ளிகளைச் சுற்றிலும் இந்த தீயவர்கள் பதிவிருப்பார்கள்.

அநேகரை போதைக்குட்படுத்தவும், அவர்களை அவ்விதமான பழக்கங்களினால் பிடித்து தங்கள் வசப்படுத்திக் கொள்ளவும் தீவிரமாக இந்தப் பொல்லாதவர்களுடைய கால்கள் உலாவும். பெண் பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, ஆண் சிறுவர்களுக்கும் தேசத்தில் தீமையும், பாலியல் வன்முறைக் கொடுமைகளும் தீவிரமாக அரங்கேறுவதைப் பார்ப்பீர்கள். இது சாத்தானால் பிள்ளைகள் மேல் கட்டவிழ்த்து விடப்படும் கொடுமை. இனி வருகிற எழுப்புதலின் காலத்தில் கர்த்தருடைய கரங்கள் பிள்ளைகளைத் திரளாக சந்திக்கவும், அவர்களைக் கொண்டு பெரிய காரியங்களை நிறைவேற்றவும் சித்தங் கொண்டிருக்கிறதினாலே தீவிரமான தீமைகளை முந்திக் கொண்டு பிள்ளைகள் மேல் கட்டவிழ்த்து விட சாத்தான் திட்டம் செய்கிறான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## ஜெபக் குறிப்புகள்

1. குழந்தைகளைக் குறிவைத்துக் கடத்துகிறதும், அவர்களை பல்வேறு காரணங்களுக்காக விற்பனை செய்கிறதுமான பொல்லாத வியாபாரங்கள் யாவும் தேசத்தை விட்டு அப்புறப் படுத்தப்படும்படியாக ஜெபியுங்கள்.

2. இப்படிப்பட்ட கொடிய வியாபாரங்களில் ஈடுபடும் அரசியல்வாதிகள், பணபலம் பெற்றவர்கள், போலி மதவாதிகள் போன்றோரின் முகத்திரைகள் கிழிக்கப்படும்படியாகவும், இப்படிப்பட்டவர்கள் பிடிபட்டு கடுமையாக தண்டிக்கப்படவும் ஜெபியுங்கள்.

3. பிள்ளைகளின் உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களை பாவத்தில் விழச் செய்கிறதும், அவர்களுடைய உடல் உறுப்புகளுக்காக அவர்களைக் கொள்ளையிடவும் புறப்படுகிற பொல்லாத மனிதர்கள் மருத்துவத் துறையிலும் எழும்பாதபடிக்கும் ஜெபியுங்கள்.

4. சிறு பிள்ளைகள் மேல் கட்டவிழ்த்து விடப்படுகிற பாலியல் வன்முறைகள் கட்டப்படவும், இப்பபடிப்பட்ட பொல்லாத காரியங்களைச் செய்கிறவர்கள் கடுமையாக தண்டிக்கப்படும்படியான சட்டங்கள் தேசத்தில் கொண்டு வரப்படவும் ஜெபியுங்கள்.

### தொடர்ந்து ஜெபிக்க விரும்புகிறீர்களா?

தொடர்ந்து இதுபோன்ற தீர்க்கதரிசனங்களுக்கு ஜெபிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கீழ்க்கண்ட எங்கள் தொடர்பு எண்களில் ஏதாவது ஒன்றிற்கு மிஸ்டு கால் கொடுங்கள். எங்கள் ஊழியர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்ச்சியாக நீங்கள் ஜெபத்திற்கான தீர்க்கதரிசனங்களை எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி செய்வார்கள்.

0092/TAM/2019/0003

**prophetic propagators mission**

MADURAI 9488987770
CHENNAI 9600001844
BANGALORE 8095772333

propagators@vojmedia.com